**எச்சரிக்கையாயிரு**

**வாசிக்க**: 1**கொரிந்தியர்** 9:24-25, 1**தீமோத்தேயு** 4:16

வாழ்க்கை ஏனோதானோ என்று வாழ்ந்துவிட தேவன் கூறவில்லை. ஏதோ வாழ்ந்தோம் மரித்தோம் என்பதோடு நம் வாழ்க்கை முடிவதுமில்லை. மரணத்திற்கு பின் நமக்கு ஒரு வாழ்க்கை (பரலோகம்) உண்டு. அதுதான் நித்தியமானது. எனவே இவ்வுலக வாழ்க்கையில் நாம் மிகுந்த எச்சரிப்போடு வாழவேண்டும். இவ்வுலகில் நாம் வாழ்வதுதான் நம் நித்திய வாழ்வை முடிவு செய்யும்.

வேதம் நாம் எவ்வித காரியங்களில் எச்சரிக்கையாயிருக்கவேண்டும் என்று போதிக்கிறது?

1. இடுக்கமான வாசல்வழி உட்பிரவேசிப்பது கீழ்படிதல் எளிதானதா? கீழ்படியாமை எளிதானதா? எதிர்த்து பேசுவது எளிதா? பொறுமையாய், தாழ்மையோடு பதில் கூறுவது எளிதா? பிறர் ஏதோ உன்னைப் பற்றி தறாக கூறும்போது சண்டை போடுவது எளிதா? தேவன் பார்க்கிறார் என பேசாமல் இருப்பது எளிதா? இச்சையான காரியங்களை பார்ப்பது, இதில் ஈடுபாடு கொள்வது எளிதா, இச்சையான காரியங்களை பாராமல், அதில் ஈடுபடாமல் உன்னைத் தற்காப்பது எளிதா? படிக்கவேண்டிய நேரத்தில் படிக்காமல் மனதை அலைபாயவிடுவது எளிதா, அல்லது ஒழுங்காக படிப்பது எளிதா? பொய்பேசுவது எளிதா? உண்மைபேசுவது எளிதா? இவ்வாறு நாம் அநேக காரியங்களை கூறிக்கொண்டே போகலாம். எது இடுக்கமான வாசல்? கீழ்படிதல், பொறுமையாய் இருந்தால், உண்மை பேசுதல், தேவனுக்குப் பிரியமானதச் செய்தல் ஆகும். எனவே இடுக்கமான வாசல் வழி நாம் நடக்க எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

இலக்கை நோக்கி ஓட பிலி 3:14 1கொரி 9:24-25 இரட்சிக்கப்பட்டவர்கள் தேவனை ஏற்றுக்கொண்டவர்கள். நம்மை தேவன் ஒரு நோக்கத்தோடு அழைத்திருக்கிறார். நமது இலக்கு பரலோகம். எனவே நித்திய ஜீவனை பெற்றுக்கொள்ளத்தக்கதாய் நாம் ஓடவேண்டும். நாம் உலகப்பிரகாரமான ஓட்டப்பந்தயத்தில் ஓடும்பொது அதற்காக ஆயத்தத்தைச் செய்கிறோம். பலநாள் பயிற்சி செய்கிறோம். நமக்கு கொடுக்கப்பட்ட பலத்தில் தான் ஓடுகிறோம். எனவே இலக்கை அடைந்து விட முன்னோக்கி ஓடுகிறோம். எனவே இலக்கை அடைய எச்சரிக்கையாக ஓடக்கடவோம்.

இரட்சிப்பு நிறைவேற (பிலி 2:12) இரட்சிப்பு என்பது ஒருநாளில் நிறைவேறி முடிக்கும் அனுபவமல்ல. அனுதினமும் நாம் இரட்சிப்பு நிறைவேற முயலவேண்டும். இயேசுவை ஏற்றுக்கொண்டுவிட்டோம் என்று சொல்லி, பின் நாம் நம் இஷ்டம் போல வாழமுடியாது. வீட்டைக் கட்டும் நாம் அதைத் தொடங்கி முடியும் வரை எவ்வளவு பிரயாசப்படுகிறோமோ, அதுபோல இரட்சிக்கப்பட்ட அன்று தொடங்கிய அந்தச் செயல் அனுதினமும் நம்மை தற்காத்து, நாம் இவ்வுலகைவிட்டு செல்லும்வரை வளர்ந்து கொண்டே இருக்கவேண்டும்.

கனிகொடுக்க நாம் இயேசுவால் அழைக்கப்பட்டிருக்கிறோம். எனவே நல்ல கனிகளைக் கொடுக்க எச்சரிக்கையாய் இருக்கவேண்டும்.

**கேள்விகள்**:

1. எந்த வழி எளிது? எந்த வழியாய் செல்ல வேண்டும்?

2. நமது இலக்கு எது?

3. எது நித்திய வாழ்வை பெற முடிவு செய்யும்?